# போருக்குப் பின் இலங்கையின் வடமாகாண அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள், ஆற்றல்கள், சவால்கள்- ஒரு பொருளியல் நோக்கு

கலாநிதி ஞா.ஞானச்சந்திரன்

விரிவுரையாளர் (தகுதிகாண்), பொருளியற்துறை

கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

E- Mail: Gnanachandran4@yahoo.com

---

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றாக விளங்கும் வடமாகாணம் 8,884 சதுர கிலோமீற்றர் மொத்த நிலப் பரப்பளவைக் கொண்டதோடு, நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 13.22% உள்ளடக்கியது. மேலும் மொத்த நிலப் பரப்பளவில் 1,981.30 சதுர கிலோ மீற்றர் காடுகளாகவும், 302.9. சதுர கிலோமீற்றர் கடல்களாகவும் உள்ளது. ஏறத்தாள 1.1 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டது. இந்த ஆய்வின் பிரதானமான நோக்கம் வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை, அதன் உள்ளார்ந்த ஆற்றல்களை அறிவதோடு, பொருளாதார அபிவிருத்தியில் அது எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காண்பதாகவும் இருக்கும். ஆய்வுப் பிரச்சினையாக அல்லது சவாலாக வடமாகாணத்தின் புனீ பங்களிப்பு குறைவானதாக உள்ளமை, யுத்த காலத்தில் பெருமளவு நிலம் கையகப்படுத்தப்பட்டமை மற்றும் வடபுல மக்களின் வாழ்வாதார இழப்புக்கள், உயிரிழப்பு, ஊனம், சமூக பொருளாதார உட்கட்டமைப்புகள் அழிவுகள், வருமான சமமின்மையும் வறுமையும், யுத்த காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பின்னர் (2009 இன் பின்) படிப்படியான வளர்ச்சியும் ஆய்வு முறையாக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டதோடு, விபரணப்புள்ளிவிபர முறை மூலம் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு M.S.Excell என்ற கணணி மென்பொருளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகள் மற்றும் சிபார்சுகளாக இங்கு நெல் பிரதான விவசாய உற்பத்தியாகவும், சின்னவெங்காயம், பச்சைமிளகாய், மரமுந்திரிகை, உருளைக்கிழங்கு, தென்னை, பனை, புகையிலை என்பன முக்கியமான ஏனைய விவசாய உற்பத்திகளாகவும் உள்ளன. மேலும் கைத்தொழில் நடவடிக்கைகளாக சீனிக் கைத்தொழில், கண்ணாடிக் கைத்தொழில், காகித உற்பத்தி, துணி உற்பத்தி, தீப்பெட்டி, சவர்க்காரம், பசளை போன்ற அன்றாட பாவனை உற்பத்தி போன்றவற்றுக்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதோடு நடுத்தர சிறுகைத்தொழில்கள், கிராமியக் கைத்தொழில்கள் இங்கு அபிவிருத்தியுற நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே வடக்கின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த அரசு உடனடியாக குறைந்த வட்டி வீதத்தை*

*இவர்களுக்கு அறவிடுவதோடு,திருப்பிச் செலுத்தும் காலத்தைக் கூட்டி அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை கூட்டவேண்டும் சவால்களை வெற்றிகொள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை முழுமையாக விடுவித்தும், வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்தும் உற்பத்தித் துறைகளை வளர்க்க வேண்டும். வடக்கை பொருளாதார விருத்தியிலும் ஏனைய பிராந்தியங்களோடு இணைக்க வேண்டும், வேலைவாய்ப்புக்கள், போரால் பாதிக்கப்பட்ட சொத்துக்களை இழந்த குடும்பங்கள், குடும்பத்தலைமையை இழந்த குடும்பங்கள், வலுவிழந்தவர்கள், அங்கவீனர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் இப் பகுதியினருக்கு அரச செலவீனத்தில் நிதி ஒதுக்கப்பட வேண்டும். இவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதியினரையும் முன்னேற்றுவதனூடாகத்தான் ஏனைய மாகாணத்தவருக்குச் சமனாக ஒரு பிராந்திய அபிவிருத்தியை ஏற்படுத்தி, மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் ஏனைய மாகாணங்களுக்குச் சமனான பங்களிப்பை வடமாகாகாணமும் வழங்க முடியும்.*

***திறவுசொற்கள்****- GDP (மொத்த உள்நாட்டுஉற்பத்தி), நவீனதொழில்நுட்பப் பிரயோகம், நிதிநெருக்கடி, வட்டிவீதம். கூட்டிய பெறுமதி*

## 1.1 ஆய்வுப் பின்னணி

இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றாக விளங்குவது வடமாகாணம். இது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கொண்டது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் இப் பிராந்தியம் 13.6% ஐ உள்ளடக்கியது. மொத்தப் பரப்பு 8884 ச.கி.மீ, இதில் நிலம் 8290 ச.கி.மீ, ஏறத்தாள 1.1 மில்லியன் மக்கள் (11,19,000) இங்கு வாழ்கின்றனர். மொத்த சனத்தொகையில் ஏறத்தாள 5% இங்கிருப்பதோடு, (இணையம் - www.np.gov.lk ). இயற்கை வளங்களாக வளமான விவசாயக் காணிகள், கனியங்கள், காடுகள், சதுப்புநிலங்கள, விரிகுடாக்கள் அழகிய கடற்கரைகள் பவளப்பாறைகள் படிவுகள்,ஆழமற்ற கரையோரக் கடல்கள், இயற்கைத் துறைமுகங்கள், சுற்றுலா மையங்கள் என பல இன்னோரன்ன வளங்களை இம் மாகாணம் கொண்டுள்ளது.

மேலும் மொத்தநிலப்பரப்பில் 51% காடுகளாகவும், 31% விவசாய நிலங்களாகவும் உள்ளது. 2007 இலிருந்து 2017 வரை முறையே GDP இற்கு இம்மாகாணத்தின் பங்களிப்பாக,

**அட்டவணை 1.0 வடமாகாணத்தின் GDP பங்களிப்பு**

| ஆண்டு | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்திப் பங்களிப்பு | 2.9% | 3.2% | 3.2% | 3.4% | 3.7% | 4% | 3.3% | 3.3% | 4.1% | 4.2% | 4.2% |

(மூலம்- இலங்கையின் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்)

ஆக ஒரு அதிகரித்த நிலை வந்தாலும், முழு இலங்கையிலும் மிகக்குறைந்தளவான உற்பத்திப் பங்களிப்பை வழங்குவதாக வடமாகாணம் உள்ளது குறிப்பிட வேண்டியது. அதாவது மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாள 13% ஐ உடைய மாகாணம், மொத்த உற்பத்தியில் 4% பங்களிப்பை வழங்குவது துரதிஸ்ரவசமானது. இப் பிராந்தியத்தின் பொதுவான பண்புகளாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் (50% தொழிலாளர்), பெறுமதி சேர்ப்புக்கள் கூடுதலாகவுள்ளமை,. கூடுதலான அளவு சனத்தொகை 40 வயதிலும் கூடியவர்கள், குறைந்த கல்வித் தகைமை O/L, சுற்றுலா வளர்ந்து வரும் துறையாக உள்ளமை மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கூடுதலாக உள்ளமை என்பவற்றைக் குறிப்பிடமுடியும்.

2008,2009 காலங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னாரின் ஒரு பகுதி மக்கள் ஏறத்தாள 300,000 மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எனினும் 1980 களிலிருந்து இடம்பெற்ற யுத்தத்தின் விளைவாக இடம்பெயர்ந்தவர்களுக்கான நலன்புரி முகாம்கள் இன்னும் இயங்கிவருகிறது. வடமாகாணத்திலுள்ள நிர்வாகக் கட்டமைப்பை நோக்கும் போது இங்கு ஒரு மாநகரசபை, ஐந்து நகரசபைகள், 28 பிரதேசசபைகள், 34 பிரதேசசெயலகங்கள், 921 கிராமஅலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றன.( வடமாகாண சபை புள்ளிவிபரக் கையேடு-2017)


இப் பிராந்தியத்தின் சனத்தொகைகையை வருமாறு அட்டவணையில் நோக்கின்,

**அட்டவணை:1.1 மாவட்ட ரீதியாகச் சனத்தொகை-2017**

| District | Jaffna | Kilinochchi | Mannar | Mullaitivu | Vavuniya | Total |
|---|---|---|---|---|---|---|
| Population | 6,08,000 | 1,24,000 | 1,07,000 | 96,000 | 1,84,000 | 11,19,000 |

*(மூலம்- சனத்தொகை மற்றும் புள்ளிவபரத் திணைக்களம்)*

ஏறத்தாள 1.1 மில்லியன் மக்களைக் கொண்ட இப் பிராந்தியத்தின் ஏறத்தாள 54% ஆன மக்கள் யாழ்ப்பாணத்திலும், மிகக் குறைந்தளவு மக்கள் 9% முல்லைத்தீவிலும் வாழ்கிறார்கள். இதனைப் பின்வரும் பன்மடிச் சலாகை வரைபும் காட்டுகிறது.




**அட்டவணை 1.2 நடுஆண்டு சனத்தொகை(ஆயிரத்தில்)-2009-2016**

| ஆண்டு | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வட மாகாணம் | 1,145 | 1,149 | 1,160 | 1,065 | 1,074 | 1,085 | 1,094 | 1,107 |

(மூலம்- வடமாகாணசபையின் புள்ளிவிபரக் கையேடு)

வடபிராந்தியம் பல்வேறு மண்வகைகளைக் கொண்டிருப்பதோடு நெற்செய்கைக்கும் ஏனைய அறுவடைகளுக்கும் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. இப் பிராந்தியத்தின் முக்கிய விவசாயப் பொருளாதாரச் செயற்பாடுகளாக பயிர்ச்செய்கை (சின்ன வெங்காயம், பாசிப்பயறு, சோளம், மிளகாய், உழுந்து, எள்ளு, நிலக்கடலை, பழங்கள், பனந்தோட்டம்), மீன்பிடி(கரையோரம், ஆழ்கடல், நாட்டின் உட்பகுதி), கால்நடை வளர்ப்பு (மாடுகள், எருமை, ஆடு, கோழி) என்பனவும் காணப்படுகின்றன. போருக்கு முன் இப் பிராந்தியத்தின்

விவசாய உற்பத்தி உள்ளூர்தேவைக்கு மேலதிகமாக இடம்பெற்றதோடு மிகை உற்பத்திகள் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. இத்துறை தற்போது தேசியரீதியாக 12% பங்களிப்பை வழங்குதோடு, 60% ஆன மக்கள் விவசாயத்துறை சார் தொழில்களில் ஈடுபடுகின்றனர். கைத்தொழில் நடவடிக்கைகளாக விவசாயக்

கைத்தொழிலும், அரிசி ஆலையும், மீன் பதனிடல் என்பனவும், சேவைகள் துறையில் மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், சுற்றுலாத்துறை என்பவற்றையும் குறிப்பிட முடியும்.

இலங்கையில் 1977 திறந்த பொருளாதார கொள்கை அதன்வழி கட்டற்ற வர்த்தகக கொள்கை அமுல்படுத்தப்பட்டது. இதற்கு வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் உள்வாங்கப்பட்டன. உலகமயமாக்கலுக்குள் தங்களை இணைத்துக் கொண்டன. ஆனால் வடமாகாணம் விரும்பியோ விரும்பாமலோ இதில் இணைவதற்கு தடைகள் விதிக்கப்பட்டன. இதற்கு 1980 களில் ஆரம்பமான போர் பிரதான காரணமாகக் கூறப்பட்டது. வடமாகாணம் போருக்குப் பின்னரே தன்னை ஏனைய மாகாணங்களோடு இணைத்துக் கொண்டதால் அவற்றோடு போட்டிபோட முடியாத நிலை காணப்படுகிறது. ஏனைய மாகாணங்களோடு உற்பத்தி வர்த்தகம் என்ற எதிலுமே போட்டிபோட முடியாத பலவீனமான நிலையிலேயே உள்ளது. இராணுவத்தினரின் பதிவு நடவடிக்கைகள், உற்பத்தி வர்த்தக நடவடிக்கைகள், மூடியபொருளாதார நடவடிக்கையாக இருந்தமை, பெருமளவு விவசாய நிலங்கள், கைத்தொழிற்சாலைகள் உயர்பாதுகாப்பு வலயத்துள் இருந்தமை, இலங்கையிலேயே அதிகளவான இடம்பெயர்வுகள் நிகழ்ந்தமை, சொத்தழிவு, உயிர்ச்சேதம், அதிகளவு இளவயது பெண்தலைமைத்துவம் முதலியன இப் பிராந்தியத்தின் பிரதான பொருளாதார அபிவிருத்தியின் தடைக் காரணிகளாகவுள்ளன.

**1.2 ஆய்வின் நோக்கம்**

1. வடமாகாணத்தின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை, அதன் உள்ளார்ந்த ஆற்றல்களை அறிந்து, இதன் GDP பங்களிப்பை உயர்த்துதல்.

2. பொருளாதார அபிருத்தியியை ஏற்படுத்தும் வகையில் நிலங்களை விடுவித்தலும், வடபுல மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதலும்.

3. வடமாகாணத்தின் போருக்கு பின்னரான அபிவிருத்தியில் பொதுவான தொழில் முயற்சிகள், எதிர்கொள்ளும் இடர்களை அறிந்து அவற்றை மீளுருவாக்கதல்.

4. வறுமை, வருமானச் சமமின்மையின் போக்குகளை அறிவதோடு இவற்றைக் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கான வழிவகைகளை ஆராய்தல்.

**1.3 ஆய்வின் வரையறைகள்**

வடக்கின் அபிவிருத்தியின் பின்வரும் சவால்களை வரையறைகளாகக் குறிப்பிட முடியும்.

01. முப்பது வருடம் பிந்திய உலகமயமாக்கலின் இணைவு.
02. யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் முடிந்த பின்னரே வடக்குடன்

தெற்கை இணைக்கும் புகையிரத இணைப்பு ஏற்படுத்தப்பட்டமை.

03. முதனிலைத்துறையில் உள்ள பின்தங்கிய தொழில்நுட்ப முறைகள்.
04. வடக்கில் பாரிய கைத்தொழில் ஆலைகள் மூடப்பட்டமை / இயங்காமை.
05. தனியார் முயற்சியாளர்களால் எதிர்நோக்கப்பட்ட நிதிநெருக்கடிகள்.

### 1.4 ஆய்வுப் பிரச்சினைகள்

1. வடமாகாணத்தின் GDP பங்களிப்பு குறைவானதாக உள்ளமை.

2.யுத்த காலத்தில் பெருமளவு நிலம் கையகப்படுத்தப்பட்டமை மற்றும் வடபுல மக்களின் வாழ்வாதார இழப்புக்கள், உயிரிழப்பு, ஊனம்

3. சமூக பொருளாதார உட்கட்டமைப்புகள் அழிவுகள்

4. வருமான சமமின்மையும் வறுமையும்

5.யுத்த காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பின்னர் (2009 இன் பின்) படிப்படியான வளர்ச்சியும்

### 1.5 கருதுகோள்கள்

1. இலங்கையின் வடமாகாணத்தில் 1977 இன் பின் GDP பங்களிப்பு குறைந்து வருகிறது.

2. வடமாகாணத்தில் யுத்தவிளைவால் பௌதீக மனித வளங்களின் அளவு குறைவடைந்துள்ளது.

3. 1977 – 2009 வரை சமூக பொருளாதார உட்கட்டமைப்புகள் குறைவடைந்து வந்துள்ளன.

4. 1977 – 2009 வறுமை, வருமான சமமின்மை அதிகரித்து 2010 இன் பின் குறைவடைந்து வருகிறது.

5. யுத்த காலத்தில் மொத்த முதலீடுகள் வீழ்ச்சியடைந்து,2010 இன் பின்னர் அதிகரித்து வருகின்றன.

## 2. இலக்கிய மீளாய்வு

சமன்கெலேகம (2010) இலங்கையின் வடக்கு பிரதேச பொருளாதார அபிவிருத்தி, உள்ளார்ந்த ஆற்றல்களும் பிரச்சினைகளும் என்ற தனது ஆய்வுக் கட்டுரையில்,

வடமாகாணத்தின் பிரதான பொருளாதாரத் துறைகளாக விவசாயம், கடற்தொழில், தயாரிப்புக் கைத்தொழில், சுற்றுலாத்துறை என்பவற்றைக் குறிப்பிட்டு, இவை போரின் முன் கணிசமான பங்காற்றின என்றும், போர்க்காலத்தில் இவை வீழ்ச்சியடைந்து தற்போது புத்துயிர் பெற்று வருவதாகக் குறிப்பிடுகிறார். விவசாயத்தைப் பொறுத்தவரை நெல் பிரதானமாகவும் வெங்காயம், பச்சைமிளகாய், உருளைக்கிழங்கு, மரமுந்திரிகை, தென்னை, பனை மற்றும் புகையிலை முக்கியமானவை எனக் குறிப்பிடுகிறார்.

கே.மகிந்த சிறிவர்த்தன (2010) இலங்கையின் பேரினப் பொருளாதாரத்தில் யுத்தமுடிவு மற்றும் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி என்பவற்றின் தாக்கம் என்ற தனது கட்டுரையில், தனது ஆய்வு முடிவாக

பின்வருமாறு கூறுகிறார். பயிர்கள், கால்நடை, கடற்றொழில், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில், சுற்றுலாத்துறையை உள்ளடக்கிய விதத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கான பாரிய உள்ளார்ந்த ஆற்றலை இம்மாகாணம் கொண்டுள்ளதாக குறிப்பிடுகிறார்.

எச்.அமரதுங்க (2011) ‘‘இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரசியல் உறுதிப்பாட்டிற்கு பொருளாதார அபிவிருத்தியின் முக்கியத்துவம்’’ என்ற தனது கட்டுரையில் இம் மாகாணத்தின் பொருளாதார முன்னேற்றம் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என்பவற்றை மையமாகக் கொண்டதாக சுட்டிக் காட்டுகிறார். யுத்த காரணத்தால் இது தற்போது வீழ்ச்சி நிலையை பதிவு செய்வதாக குறிப்பிடுகிறார். 1981இல் மொத்த மீன் உற்பத்தியில் வடமாகாணம் 39% பங்கைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

வி.பி.சிவநாதன் (2011) இலங்கையின் வடபுலத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய ஒரு நோக்கு என்ற தனது கட்டுரையில், எமது பிரதேச பொருளாதாரம் அறிவுப் பொருளாதாரமாக மாற வேண்டியதே இன்றைய தேவை என்றும், இதற்கேற்ப உற்பத்தித் துறைகளை நாம் உருவாக்க வேண்டும் என்றும், விவசாயம், கைத்தொழில் துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே நேரத்தில் சேவைத் துறைசார் உற்பத்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

கு.மிகுந்தன் (2011) ‘‘வடபகுதி விவசாய அபிவிருத்தியில் எதிர்கால வாய்ப்புக்கள்’’ என்ற தனது கட்டுரையில் வடபகுதி தாவர இனங்களுக்கான வங்கி ஒன்றைப் பேண வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது என்றும் தனித்துவம் மிக்க உயர் பயிர் இனங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு எமது பிரதேசத்திற்கான விதை வங்கி அவசியம் என்கிறார்.

எஸ்.உதயகுமார் (2011) ‘‘இலங்கையின் வடமாகாணத்தில் கைத்தொழில் துறையின் செல்நெறியும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும்’’ என்ற தனது கட்டுரையில், வடமாகாணத்தில் கைத்தொழில்துறை அபிவிருத்திக்கான பௌதீக மனித வளங்கள் நிறைய உள்ளன என்றும், கைத்தொழிலுக்கான வளங்களை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்ய முயல வேண்டும் மற்றும் நடுத்தர சிறுகைத்தொழில்கள், கிராமியக் கைத்தொழில்கள் இங்கு அபிவிருத்தியுற நிறைய வாய்ப்புக்கள் உள்ளன என்பதோடு விவசாய உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் கிராமிய மட்டத்தில் உருவாக்க வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

## 3. ஆய்வு முறையியல்

வடமாகாணத்தில் பொருளாதாரத்துறைகளை இனங்கண்டு அதனை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பிராந்தியத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்,வவுனியா என்ற 5

மாவட்டங்கள் ஆய்வுப் பிரதேசங்கள் இதனுள் அடங்குகிறது.

இப்பிரதேச அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள், சவால்களை ஆராய்வதற்கு முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு மூலங்களாக இலங்கை சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைத் தரவுகள், மற்றும் வடக்கு மாகாணசபையின் வருடாந்த அறிக்கைத் தரவுகள், இணையத் தளங்கள், மாவட்ட செயலகத்தால் வெளியிடப்படும் வருடாந்த புள்ளிவிபரக் கையேடு (திட்டமிடற் கிளையினால் வெளியிடப்படுவது) என்பவற்றையும் வைத்து, விபரணப் புள்ளிவிபரவியல் முறையைப் பயன்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவுகளை பகுப்பாய்வு செய்ய M.S.Excell என்ற கணணி மென்பொருளும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 4. முடிவுகளும் கலந்துரையாடலும்

முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப்பிரதேசம் சம்பந்தமான அடிப்படை அபிவிருத்திசார் குறிகாட்டிகளை நோக்கலாம். இப் பிரதேசத்தில் ஏறத்தாள 1.1 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். இது மொத்தக் குடித்தொகையில் 5% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பிராந்தியத்தின் மாதாந்த குடும்ப சராசரி வருமானம் 10,000-15,000 என்ற வீச்சுக்குள் காணப்படுகிறது. வடமாகாணம் GDP இல் 4.2% பங்களிப்பை ஆற்றுகிறது. (2017) ஒப்பீட்டு ரீதியில் இது குறைந்தளவான பங்களிப்பாகும்.

***அட்டவணை 4.1 வடமாகாணக் குடித்தொகை (ஆயிரத்தில்)***

| மாவட்டம் | 2009 | 2010 | 2011 | 2012 | 2017 |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 607 | 611 | 617 | 585 | 608 |
| கிளிநொச்சி | 154 | 156 | 160 | 114 | 124 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மன்னார் | 103 | 104 | 105 | 100 | 107 |
| முல்லைத்தீவு | 154 | 148 | 144 | 92 | 96 |
| வவுனியா | 169 | 174 | 177 | 172 | 184 |
| **மொத்தம்** | **1187** | **1193** | **1203** | **1063** | **1119** |

*(மூலம்- சனத்தொகை மற்றும் குடிசன புள்ளிவிபரத் திணைக்களம்)*

ஆய்வுப் பிரதேசத்தில் குடித்தொகையானது தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு வந்து 2012இல் சடுதியாக வீழ்ச்சியடைந்து, பின்னர் படிப்படியாக அதிகரித்துச் செல்கிறது. இது அபிவிருத்திக்கான சவாலகவே உள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஊழியப்படைப் பங்கேற்பு வீத்த்தை மாவட்டரீதியாக நோக்கின்,

**அட்டவணை 4.2 வடமாகாணக் ஊழியப்படை பங்கேற்பு வீதம்-2016**

| மாவட்டம் | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| ஊ.ப.வீதம் | 44.4% | 45.9% | 53.6% | 54.4% | 45.1% |

(மூலம்- சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்)


வடக்கு மாகாணத்தில் மிகக் கூடிய ஊழியப்படை பங்கேற்பு வீதம் முல்லைத்தீவிலும், மிகக் குறைந்த பங்கேற்பு வீதம் யாழ்ப்பாணத்திலும் உள்ளது. வடக்கு மாகாணத்தின் முதன்மையான பொருளாதாரத்துறைகளான விவசாயம், கைத்தொழில், கடற்தொழில், சுற்றுலாத்துறை, தயாரிப்பு என்பன தம்மகத்தே கொண்டிருக்கும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை பிரச்சினைகளை இங்கு நோக்கலாம்.

**அட்டவணை 4.2 வடக்கு மாகாணப் பொருளாதாரக் கட்டமைப்பு-(மில்.ரூபாய்களில்)**


| **துறைகள்** | **2009** | **2010** | **2011** |
|---|---|---|---|


| | | | |
|---|---|---|---|
| வேளாண்மை | 28,582 | 30,970 | 58,464 |
| கைத்தொழில் | 14,534 | 28,836 | 45,005 |
| பணிகள் | 1,12,211 | 1,29,933 | 1,37,230 |
| **மொத்தம்** | **1,55,828** | **1,89,740** | **2,41,200** |

வரைபு 4.1 வேளாண்மைத் துறை




வரைபு 4.2 கைத்தொழில்த் துறை





(மூலம் இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2012)

பொதுவாக விவசாயத்துறை, மற்றும் கைத்தொழில், சேவைகள் துறை என்பவற்றின் பங்கு 2009 இற்குப் பின் படிப்படியாக அதிகரித்து வருவதை வரைபு காட்டுகிறது.

**வரைபடம் 4.4 மாகாண மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்திப் பங்கு**




2015,2016 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பங்களிப்பின் அடிப்படையில் வடமாகாணம் ஒன்பதாவது இடத்திலுள்ளது.

**விவசாயத்துறை**

விவசாயத்துறையைப் பொறுத்தவரை பொருத்தமான மண்வகைகள் காணப்படுகிறது. வடக்கில் ஏறத்தாள 50 சதவீதத்தினர் விவசாயத்துறையில் ஈடுபடுகின்றனர். தேசியரீதியில் விவசாயத்துறைக்கு இப்பிராந்தியம் 12 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. நெல், பச்சைமிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, மரமுந்திரிகை,புகையிலை, தென்னை,பனை முதலியன செய்கை பண்ணப்படுகின்றன. நெற்செய்கையில் வடமாகாணம் 10% பங்களிப்பையே (2013) தேசியரீதியில் வழங்குகிறது. 1981 இல் 77,480 கெக்ரேயர் நெற்செய்கை பண்ணப்பட்டது. யுத்தகாலத்தில் குறிப்பாக 2007 இல் 49,558 கெக்ரேயராகக் குறைவடைந்துள்ளது. இப்போது மீண்டும் அதிகரித்து வருகிறது.

1980 களில் வடபிராந்தியம் சின்ன வெங்காய உற்பத்தியில் மிகப்பெரிய பிராந்தியமாக இருந்தது. தேசிய ரீதியில் அதன் உற்பத்திப் பங்களிப்பு 56% ஆகும். பச்சைமிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, மரமுந்திரிகை,புகையிலை போன்ற காசுப்பயிர்களின் பயிர்ச்செய்கையும், பால் உற்பத்தி,கால்நடைவளர்ப்பு போன்ற கால்நடை உற்பத்தியும் வடக்கின் பிரதான விவசாய நடவடிக்கைகளாகும். போரினால் இவை அனைத்து உற்பத்திகளும் பாதிப்படைந்த நிலையில் புகையிலை மட்டும் விரிவடைந்து வரும் ஒரு காசுப்பயிராக உள்ளது.

வடமாகாணம் பாற்பண்ணைத் தொழிலை விருத்திசெய்வதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளது. (தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்-2008). மாடுகள், ஆடுகள், செம்மறிஆடுகள் ஆகிய கால்நடைகளையுடைய பாரிய உற்பத்தித் துறையாக இப்பிராந்தியம் இருந்துள்ளது. மேலும் உலர்பால், கட்டிப்பால், ஐஸ்கிறீம் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்திகள், சிற்றுண்டிகள், இறைச்சி என பல்தர உற்பத்திகள் இங்கு இடம்பெற்றன. போரினால் இடம்பெயர்வு, கால்நடைகளின் அழிவு, மேய்ச்சல் நிலங்களில் கண்ணிவெடிகள் கால்நடை உற்பத்தியில் வீழச்சியைப் பிரதிபலித்துள்ளது. இதற்கு அரசு கால்நடை உற்பத்தியாளர்களை உளக்குவிப்பதோடு, இதை வணிக அடிப்படையில் மேற்கொள்ள உதவ

வேண்டும். இத்துறைக்கு புத்துயிரளிக்க வேண்டும்.

அடுத்து மீன்பிடித் துறையில் வடமாகாணத்தில் போருக்குமுன் ஏறத்தாள 40,000 கடற்தொழிலாளர்கள் தொழில் செய்து வந்துள்ளனர். 1981 இல் இலங்கையின் மொத்த மீன்பிடி உற்பத்தியில் வடமாகாணம் 39% பங்களிப்பை ஆற்றிவந்துள்ளது.(எச்.அமரதுங்க-2011) ஆனால் இந்த எண்ணிக்கை தற்போது 20,000 ஆக குறைந்துள்ளது. 1980 இல் வடமாகாண மீன்உற்பத்தி 92000 தொன்களாகும். இறால் நண்டு முதலிய பெறுமதியான மீன்வகைகளும், ஆசிய நாடுகளகிய சீனா், யப்பான், தாய்வான், தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்றவற்றால் பெரிதும் விரும்பப்படும் கடல் நண்டும் இங்கு உள்ளது. போரின் பின் இவை செங்குத்தாகக் குறைவடைந்தது.

இத் தொழிற்துறைசார் உள்ளார்ந்த வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. போருக்கு முன்னரான தடைகள் பின்னரும் முற்றாகத் தளர்த்தப்படவில்லை. நேரக்கட்டுப்பாடுகள், சக்தி குறைந்த இயந்திரப் பாவனை,இரவுத்தடை, 25 குதிரை வலு இயந்திரத்தை பயன்படுத்தல் தடை, இந்திய மீனவர்களின் ஆதிக்கம் இத்துறை எதிர்கொள்ளும் சவால்களாக உள்ளன. மீன்பிடித்துறையில் வடபுலம் அதற்கு பொருத்தமான கடல்ப் பிராந்தியத்தைக் கொண்டிருந்தாலும் கூட A9 திறப்பால் தென்னிலங்கை வியாபாரிகள் இங்கு வந்து மொத்தமாக கொள்வனவு செய்து செல்கின்றனர். இதனால் உள்ளுர் வியாபாரிகள் வாகன உடைமையாளர்களின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். சர்வதேச கடல் எல்லைகளைத் தாண்டும் மீனவர்களினைத் தடுக்கும் பொருட்டு ஒரு திட்டம் அமுல்ப்படுத்தவேண்டும். மேலும் விவசாயத்துறைசார் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசனப் பொறியியலாளர்,கால்நடை மருத்துவர் போன்ற வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

விவசாயத்துறை எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் பற்றி நோக்கும் போது பெருமளவு நிலம் அவற்றில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டாலும் இன்னமும் விடுவிக்கப்படாத பல நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயத்துள் இருப்பதோடு, கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டிருப்பதும் அச்சுறுத்தலாக உள்ளது.இது விசாயிகளின் வருமானத்தை மட்டுமல்ல அதை சந்தைப்படுத்தும் வியாபாரிகளின் வருமானம், காவிச் செல்வோர் வேலைவாய்ப்பு எல்லாவற்றையுமே பாதித்துள்ளது. விவசாயம் மீன்பிடி தமது ஊட்டிய பெறுமதியையும் இழந்திருக்கிறது.

விவசாயத்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைக்கான தீர்வுகளாக, கண்ணி வெடிகளை அகற்றுதல், உயர்பாதுகாப்பு வலயக் காணிகளை அகற்றுதல், விவசாயத்துறையில் நவீனதொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல், நவீன முறைமைகள் குறித்த செயலமர்வுகள், கருத்தமர்வுகள் நடாத்துதல், நீர்ப்பாசன முறைமையை

விருத்தி செய்தல், விவசாயத்துறை சார் நிறுவன அமைப்புகள், உத்தியோகத்தர்களை நியமித்தல், விருத்திசெய்தல், கடற்தொழிலாளர்கள் சர்வதேச எல்லைகளைத் தாண்டிச் செல்வதைத் தடுக்கும் சட்டங்ளை உருவாக்குதல். மேலும் மூலிகைப் பயிர்கள் எமது பிரதேசத்தில் விருத்தி செய்வதை ஊக்குவிக்க வேண்டும். இதன்மூலம் சுதேச வைத்தியமும், இயற்கை வைத்தியமும் வளரும், இது மேலைத்தேய வைத்தியத்திலும் சிறந்தது. மேலும் விவசாயக் கல்வி வளர்க்க வேண்டும். க.பொ.த (சா/த)இலிருந்து பல்கலைக்கழகம் வரை அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் விவசாய பாடத்தை கற்க வசதிகள் வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டும்', விவசாய பூமியின் முறையான அபிவிருத்திக்கு விவசாயக்கல்வி இன்றியமையாதது.

மேலும் விற்பனை நிலையங்களை மேம்படுத்தி தகவல் நிலையங்களை ஸ்தாபித்தல், விவசாய உற்பத்திகளை பாதுகாத்து வைப்பதற்கான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தல், கடன் வசதிகளை மேம்படுத்தல் மூலம் வடக்குப் பொருளாதாரத்தை மேம்படுத்தி பொருளாதார வளர்ச்சியை நோக்கிக் கொண்டு செல்ல முடியும். இங்கு அபிவிருத்தியை ஏற்படுத்த இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல், வாழ்வாரத்திற்கு உசிதமான சூழலை உருவாக்குதல், பௌதீக மனித வளங்கள் சிறப்பாக பயன்படுத்தல், சேதமடைந்த பௌதீக சமூக உட்கட்டமைப்புக்களை அரச தனியார் பங்கேற்புடன் புனருத்தாரணம் செய்தல் என்பவற்றின் மூலம் வடமாகாணமும் இலங்கையின் தேசியப் பொருளாதாரத்துக்கு கணிசமானளவு பங்காற்ற முடியும்.

### கைத்தொழிற்துறை

கைத்தொழிற்துறை மிகப் பலவினமான நிலையில் உள்ளது கைத்தொழில் துறைகள் யாவும் அழிவடைந்த நிலையில் குறை இயலளவில் உள்ளன. புடைவை, அலுமினியம், குளிர்பான உற்பத்திகள், சீமெந்துத் தொழிற்சாலை, வடிசாலை, இரசாயனத் தொழிற்சாலை,உப்பளம்,ஓட்டுத் தொழிற்சாலை, கனிய வளத தொழிற்சாலை, பூந்தோட்டம் கைத்தொழில் வளாகம், மீன் பொதி செய்யும் தொழில் என எல்லாம் செயலிழந்தும் மெதுவான பயன்பாட்டிலும் உள்ளது. இப் பிராந்தியப் பொருளாதாரத்தின் பல்வகைத் தன்மையை வழங்குவதற்கு காங்கேசன்துறையிலுள்ள சீமெந்து ஆலையும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் மீண்டும் சிறப்பாக இயங்க வேண்டும். யாழ்குடாநாட்டில் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்திசெய்யப் பயன்படுத்தும் சிலிக்கா மணல் பெருமளவில் உண்டு.

அரசால் நிர்மாணிக்கப்படும் அரசின் பிரதான கைத்தொழிற்சாலைகளாக காங்கேசன் சீமெந்து ஆலை, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, திக்கம் பனம் வடிசாலைக் கைத்தொழில், காரைநகர் படகு பணிக்களம், குருநகர் மீன்வலைத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், முல்லைத்தீவு ஒட்டிசுட்டான்

ஓட்டுத்தொழிற்சாலை, மன்னார் பேசாலை மீன் தகரத்தில் அடைக்கும் நிலையம், மன்னார் பனிக்கட்டி உற்பத்தி நிலையம், வவுனியா பூந்தோட்டம் கைத்தொழில் வழாகம் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

இத்துறைசார் வேலைவாய்ப்புக்களும் இழக்கப்பட்டுள்ளன. போதிய சந்தை வாய்ப்புக்கள் பற்றாக்குறையாக உள்ளது. தவிர தகவல் நிலையங்கள் குறைவாக உள்ளன. போதியளவான பயிற்சி நிலையங்கள் இன்மை, தொழில்நுட்பப் பற்றாக்குறை, போதிய நிதிப் பற்றாக்குறை, போட்டித்தன்மை, புத்தாக்கம், போதிய தொழில்நுட்ப அறிவின்மை, குறைவான இணையத்தள வசதிகள். இடைத்தரகர்களின் மிதமிஞ்சிய செயற்பாடு, படையினரின் உற்பத்தி சந்தைப்படுத்தல் நிகழ்வுகள், பதிவுகள் என இப் பிராந்தியம் கைத்தொழிற் துறை சார்பாக பாரிய பிரச்சினைகளாக உள்ளன.

மலேசியா 1960 களில் இலங்கையைப் போன்று இருந்தாலும் இன்று கைத்தொழிலில் பாரிய வளர்ச்சியடைந்துள்ளது. காரணம் அது பாரிய கைத்தொழில்களை நிறுவியமையாகும். சீனிக் கைத்தொழில், கண்ணாடிக் கைத்தொழில், காகித உற்பத்தி, துணி உற்பத்தி, தீப்பெட்டி, சவர்க்காரம், பசளை போன்ற எமது பிராந்தியத்திற்குப் பொருத்தமான கைத்தொழில்களை இயக்க வேண்டும். இதற்காக திறன் வாய்ந்த தொழிற்படையை பொருத்தப்பாடுடையவாகளாக கைத்தொழிலுக்குள் உள்வாங்குவதற்கு பொருத்தமான கலைத்திட்டத்தை பாடசாலைகள் மற்றும் உயர் கல்வி நிலையங்கள் கொண்டிருக்க வேண்டும். அல்லது தொழிற்சாலைகளில் உள்ளகப்பயிற்சிகளை கல்விநிலையங்களுடன் இணைந்த வகையில் வழங்கவேண்டும். தொழிலாளர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கவேண்டும். இதற்கு வட மாகாணத்திலுள்ள அரச கைத்தொழில்களை தனியார் மயமாக்கவேண்டும். நீடித்த வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய, போட்டித் தன்மையுடைய அறிவுசார் கைத்தொழில்களை (கணணி மென்பொருள்) உருவாக்க வேண்டும். புத்தாக்கம் பெறுமதி சேர்ப்புக்களை அதிகரிக்க வேண்டும். இதற்கு தோற்பொருள் உற்பத்தி, விவசாயம் சார் கைத்தொழில், உணவு பதனிடல், கனிமம் மற்றும் உலோகப் பொருள் உற்பத்தி என்பவற்றிற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும்.

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி அனுபவத்தின் படி வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளும், நிக்ஸ் (NICS) நாடுகளும் தமது வளர்ச்சிக்கு கைத்தொழில் அபிவிருத்திக்கே முதன்மையளித்திருந்தன. அந்த வகையில் வடமாகாணமும் கைத்தொழில் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். கைத்தொழிற் துறையின் வளர்ச்சி சேவைகள் துறையை வளர்க்கும். ஆதர்லூயிஸ் என்ற அபிவிருத்திப் பொருளியலாளர் கூறியது போல விவசாயம் வளர்ந்து கைத்தொழிலை வளர்த்து, விவசாயமும் கைத்தொழிலும் சேர்ந்து சேவைகள் துறை வளரக் காரணமாகும்.

இது தேசியப் பொருளாதாரத்தின் மொத்தஉள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கவும் அதன் வழி அபிவிருத்தி ஏற்படவும் வழிசெய்யும்.

இறுதியாக சேவைகள் துறையினை நோக்கும் போது போரினால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையும் தற்போது வளர்ச்சியடைவதற்கான ஆற்றல்களைக கொண்டுள்ளது. சுற்றுலாத்துறை பெருமளவு வேலை வாய்ப்புக்களை பெற்றுத் தருவதோடு வருமானத்தையும் ஈட்டித் தரக்கூடியது. தற்போது தென்னிலங்கை மக்களின் பிரதான சுற்றுலாமையமாக வடமாகாணம் இருப்பது குறிப்பிடத்தக்கது. வடக்குத தெற்கை இணைக்கும் புகையிரதப்பாதை யாழ்ப்பாணம் வரை விஸ்தரித்திருப்பது போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட புரட்சியாகக் கொள்ளலாம்.

**அட்டவணை 4.4 தொழிற்கட்டமைப்பு (%)-2016**

| மாவட்டம் | விவசாயத்துறை | கைத்தொழிற்துறை | சேவைகள் துறை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 24.4% | 24.2% | 51.3% |
| மன்னார் | 31.7% | 16.6% | 51.7% |
| வவுனியா | 32% | 19% | 49% |
| முல்லைத்தீவு | 40.5% | 19% | 40.4% |
| கிளிநொச்சி | 27% | 25.4% | 47.6% |
| வடமாகாணம் | 49.5% | 22.1% | 28.4% |

(மூலம்- வடக்கு மாகாண சபையின் புள்ளிவிபரக் கையேடு)

வடமாகாணத்தில் பொதுவாக ஏறத்தாள 50% இனர் விவசாயத்தொழிலில் ஈடுபடுவதையும், 22% இனர் கைத்தொழிலில் ஈடுபடுவதையும், 28% இனர் சேவைகள் துறை சார் உற்பத்தியிலும் ஈடுபடுகின்றனர்.

**வறுமையும் வருமானப் பரம்பலும்**

தேசியரீதியான வறுமை, சமத்துவமின்மையோடு ஒப்பிடுமிடத்து, வடக்கின் நிலைமை மோசமாகவுள்ளது. தேசியரீதியில் உயர்வருமானம் பெறும் 10 சதவீதத்தினரின் வருமானம், குறைந்த வருமானம் பெறும் 10 சதவீதத்தினரின் வருமானத்தின் 36 மடங்காக உள்ள அதேநேரம், இவ் இடைவெளி வடக்கில் 80

மடங்காகவுள்ளது. (இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை-2010)

**அட்டவணை 4.5 தலாவறுமைச் சுட்டெண்-2016**

| இடம் | 2009/2010 | 2012/2013 | 2016 |
|---|---|---|---|
| இலங்கை | 8.9 | 6.7 | 4.1 |
| வடமாகாணம் | 12.8 | 10.9 | 7.7 |

(மூலம்- இலங்கை குடிசன புள்ளிவிபரதிணைக்களம்- 2016)

இலங்கையின் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுமிடத்தும், தேசிய ரீதியாக ஒப்பிடுமிடத்தும் வறுமை, வடமாகாணத்தில் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகிறது. 2009/2010 ஆண்டுகளோடு ஒப்பிடுமிடத்து தற்போது வறுமை குறைவடைந்து வந்தாலும், 2016 ஆம் ஆண்டு இலங்கையின் வறுமை கூடிய மாகாணமாக வடமாகாணம் உள்ளது. 2016 ஆம் ஆண்டு தேசிய ரீதியாக 844 000 பேர் வறியவர்களாகக் காணப்பட, வடக்கில் 84 000 பேர் வறிய நிலையிலுள்ளார்கள். இது 10 சதவீதத்தினரைக் குறிக்கிறது. தேசிய ரீதியாக 5% உடைய இப்பிராந்தியம், வறியவர்களில் 10% ஐ கொண்டுள்ளது துரதிஸ்ரவசமானது.

வட பிராந்தியத்தை அறிவுசார் பொருளாதாரமாக மாற்றமடைய வேண்டியதே இன்றைய தேவையாகவுள்ளது. புதிய உற்பத்தித் துறைகளளை உருவாக்க வேண்டும். சேவை சார்ந்த உற்பத்தித் துறைகளை வளர்க்கக் கூடிய முறையில் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த உற்பத்தித் துறைகளை உருவாக்க வேண்டும். விளம்பரம், அச்சிடல், அழகுசாதன உற்பத்தி, வாசனைத் திரவிய உற்பத்தி போன்றவற்றிலும் கணணி சார்ந்த மென்பொருள் உற்பத்தி, இணையத்தள வலைபின்னல் செயற்திட்டங்கள் போன்ற அறிவுசார் உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்து சந்தைக்கு விட்டு சந்தையில் போட்டியிடவேண்டும். வடபகுதி வாழ்மக்கள் இவற்றைச் செய்யத் தவறும் பட்சத்தில் தேசியப் பொருளாதாரத்திலிருந்து தனித்து விடப்படும் அபாயம் உண்டு.

**முடிவுரை**

இவ்வாறான தரவுகள் தகவல்களைக் கொண்டு இப்பிராயந்தியத்தின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும் சவால்களும் பற்றி ஆராய்கிற போது பொதுவாக விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்ற அனைத்துத் துறைகளிலும் குறைந்தளவான பங்களிப்புக்கு மூன்று தசாப்தகாலயுத்தம் காரணமாகியது. மேலும் இப்பிராந்திய மக்களுக்கு வேண்டிய சமூக பொருளாதார வலுவூட்டல் மேற்கொள்ள வேண்டும். வெளிநாட்டு முதலீடுகள் வழவழைக்கப்பட வேண்டும். மூன்று துறைகளிலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு உற்பத்தி வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் வடமாகாணத்தின் உற்பத்தி இயலளவைக் கூட்டி பிராந்திய சமத்துவத்தையும் ஏற்படுத்தும் போது தேசியப் பொருளாதாரத்துக்கு காத்திரமான பங்கை வடமாகாணம் வழங்கமுடியும்.

வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் இம் மாகாணத்தின் அபிவிருத்திக்காக அதாவது உற்பத்தி ஊக்குவிப்புக்கள், வேலைவாய்ப்புக்கள், வட்டிக் கடன்கள், போரால் பாதிக்கப்பட்ட சொத்துக்களை இழந்த குடும்பங்கள், குடும்பத்தலைமையை இழந்த

குடும்பங்கள், வலுவிழந்தவர்கள், அங்கவீனர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் இப் பகுதியினருக்கு அரச செலவீனத்தில் நிதி ஒதுக்கப்பட வேண்டும். இவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதியினரையும் முன்னேற்றுவதனூடாகத்தான் ஏனைய மாகாணத்தவருக்குச் சமனாக ஒரு அபிவிருத்தியை மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனான பங்களிப்பை வடமாகாணம் வழங்க முடியும். அல்லாது போனால் இவர்கள் தேசிய அபிவிருத்திக்கு பங்காற்ற முடியாதவாகளாகவும், அபிவிருத்தியின் நன்மைகளைப் பெறமுடியாதவாகளாகவும் இப் பிராந்தியத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாக மாறிவிடுவர். சமூக கலாசார விழுமியங்களைக் கட்டிக் காப்பதிலும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள நேரிடும்.

இப் பிரதேச பொருளாதாரம் அறிவுப் பொருளாதாரமாக மாறவேண்டியதே இன்றைய தேவையாகவுள்ளது. இதற்கேற்ப உற்பத்தித் துறைகளை நாம் உருவாக்க வேண்டும் என்றும், விவசாயம், கைத்தொழில் துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே நேரத்தில் சேவைத் துறைசார் உற்பத்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும், தகவல் தொழில்நுட்பம் சார் உற்பத்தியாளர் வடமாகாணத்தில் வளர்த்தெடுத்தல் சாத்தியமானது. மேலும் மென்பொருள் உற்பத்தி, இணையத்தள வலைப்பின்னல் ஊடான செயற்திட்டம், அச்சிடல், விளம்பரம் போன்ற அறிவுசார் துறைகளில் இளைஞர்களை விரைவாக ஈடுபடுத்துவது பயன்மிக்கதாக அமையும்.

வடமாகாணமானது பெருமளவு இயற்கை வளங்களைக் கொண்டுள்ளதோடு மொத்த நிலப்பரப்பில் 13% ஐயும், மொத்த சனத்தொகையில் 5% ஐயும் கொண்டிருந்தாலும், GDP இல் 4% பங்கை ஆற்றுவது துரதிஸ்ரவசமானது. உலகப் போர்களில் யுத்தத்தால் அழிவடைந்து இன்று உலக அரங்கில் முன்னிலை வகிக்கக் கூடிய ஜேர்மன், ஜப்பானை முன்னுதாரணமாக ஏற்று அந்த நாட்டு மக்களைப் போல அர்ப்பணிப்போடு உழைபின் இப் பிராந்தியத்தை விருத்திசெய்வதோடு தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்காற்ற முடியும். அல்லது கம்போடியாவைப் போல் யுத்தத்திற்குப் பின் வறிய நிலையிலும், ஆவுஸ்திரேலியாவின் பழங்குடிகள் போலவும் வடமாகாணம் இலங்கையில் தனித்துவிடப்படும் அபாயம் உண்டு.

**உசாத்துணை நூல்கள்**


1. The central Bank of SriLanka (1998,1999,2000,2011,2012,2013,2014,2015, 2016,2017) Annual Report, No:30, President Mawattai, Colombo :01

2. சர்வானந்தன்.மு (2010), பொருளாதார சுதந்திரம், இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் அரசியல் மறுமலர்ச்சிக்கான நெறிமுறை, பொருளியல் நோக்கு, மலர் 35, இதழ் 11-12, (பக்கம் 02-07)

3. அமரதுங்க.எச் (2010) இலங்கையின் வடக்கு கிழக்கில் அரசியல் உறுதிப்பாட்டுக்கு பொருளாதார அபிவிருத்தியின் முக்கியத்துவம், பொருளியல் நோக்கு, மலர் 35, இதழ் 11,12, (பக்கம் 8-15).

4. கலாநிதி சமன்கெலேகம (2010) இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி உள்ளார்ந்த ஆற்றல்களும் பிரச்சினைகளும், பொருளியல் நோக்கு, மலர் 35, இதழ் 11,12, (பக்கம் 16-23).

5. கலாநிதி சமன்கெலேகம (2010) இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் புனர்வாழ்வும் புனரமைப்பும் நிகழ்ச்சித்திட்டங்களும் இடையூறும், பொருளியல் நோக்கு, மலர் 35, இதழ் 11&12, (பக்கம் 24-31).

6. Northern Provincial Council(2016), Statistical information of the Northern Province (Online) Chief Secretary's Secretariat Northern Province) Available from: http:/www.np.gov.lk (Accessed on 11.01.2017).

7. Herath.H.M.S.P. (2010) Impact of Trade liberalization on economic growth of Sri Lanka: An Econometric investication, In proceeding of the $1^{st}$ international conference on Business and information, University of Kelaniya, (pg 1-25).

8. உதயகுமார்.எஸ்.எஸ்.(2011), இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கைத்தொழிற்துறையின் செல்நெறியும், அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும். யாழ்ப்பாணம், சிந்தனைக் கூடம் யாழ்ப்பாணம் மற்றும் யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

9. சிவநாதன் வி.பி.(2011), இலங்கையின் வடபுலத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய ஒரு நோக்கு, யாழ்ப்பாணம், சிந்தனைக் கூடம் யாழ்ப்பாணம் மற்றும் யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.